பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
26 04 2026 SUNDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்குவங்க சட்டப்பேரவை இரண்டாம் கட்ட தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையம் இன்று விரிவான ஆலோசனை மேற்கொண்டது.

2. தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. குஜராத்தில் உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று அமைதியாக நடைபெற்று முடிந்தது.

4. இந்தியா - உஸ்பெகிஸ்தான் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி இன்று நிறைவடைந்தது.

5. சைப்ரஸ் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Dev Ruparelia பட்டம் வென்றார்.

>>>>>><<<<<<

மேற்குவங்க சட்டப்பேரவைக்கு இரண்டாவது கட்டமாக 142 தொகுதிகளில் வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையம் இன்று விரிவான ஆலோசனை மேற்கொண்டது.

அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளும் மத்திய பாதுகாப்பு படை அதிகாரிகளும் இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர்.

இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் காணொலி வாயிலாக தேர்தல் ஆணையம் இந்த ஆலோசனையை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

மேற்குவங்கத்தில் பிஜேபி ஆட்சி பொறுப்பேற்றால் பெண்களுக்கு ஆண்டுதோறும் 36 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அம்மாநிலத்தில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

ஆஷா பணியாளர்கள் மற்றும் பெண் சுகாதார பணியாளர்களின் ஊதியமும் உயர்த்தப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

அரசுப் பணிகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஆளும் திரிணமுல் காங்கிரஸ் அரசு இளையோர் நலனை புறக்கணித்து விட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

மேற்குவங்கத்தில் விளையாட்டுத்துறை கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு தேதவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>>><<<<<<

தொழில்நுட்ப பயன்பாட்டில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற ஐ.ஐ.டி. முன்னாள் மாணவர்கள் மாநாட்டில் அவர் காணொலி வாயிலாக உரையாற்றினார்.

புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் கல்வி நிறுவனங்களும் தொழிற் துறையினரும் அரசுடன் இணைந்து பணியாற்ற வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வசிக்கும் முன்னாள் ஐ.ஐ.டி. மாணவர்கள் இந்தியாவிற்கும் உலகநாடுகளுக்குமான இணைப்பு பாலமாக திகழ்வதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>>><<<<<<

*குஜராத் மாநிலத்தில் உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று முடிந்தது.*

*15 மாநகராட்சிகள், 84 நகராட்சிகள், 34 மாவட்ட பஞ்சாயத்துகள் மற்றும் 260 தாலுகா பஞ்சாயத்துகளுக்கு நடைபெற்ற இந்த தேர்தலுக்கான வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது.*

*மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, அம்மாநில முதலமைச்சர் திரு. பூபேந்திர பாட்டீல், துணை முதலமைச்சர் திரு. ஹர்ஷ் சங்வி உள்ளிட்டோர் தங்களது வாக்குகளை காலையிலேயே செலுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை மறுநாள் எண்ணப்படுகின்றன.*

*>>>>>><<<<<<*

*ஆந்திராவில் பெட்ரோல் நிலையங்களின் செயல்பாடுகள் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு, இன்று காணொலி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.*

*அச்சத்தின் காரணமாக பொதுமக்கள் பெட்ரோல் நிலையங்களில் குவிந்ததை அடுத்து, சில பெட்ரோல் நிரப்பும் மையங்கள் மூடப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*மாநிலம் முழுவதும் 4 ஆயிரத்து 510 பெட்ரோல் நிரப்பும் மையங்கள் செயல்பட்டு வருவதாகவும், இதில் 421 மையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் கூறினர்.*

*பெட்ரோல் விநியோகம் சீராக நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று இந்த ஆய்வுக் கூட்டத்தில் திரு. சந்திரபாபு நாயுடு அறிவுறுத்தினார்.*

*>>>>>><<<<<<*

*தெலங்கானாவில் மக்களின் குறைகளுக்கு தீர்வு காண்பதற்கான இயக்கத்தை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.*

*இன்று ஹைதராபாதில் அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டத்தில் முதலமைச்சர் இதற்கான அறிவுறுத்தலை வழங்கியதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

மண்டல அளவில் இந்த இயக்கம் விரிவுபடுத்தப்பட வேண்டியது அவசியம் என்று முதலமைச்சர் இக்கூட்டத்தில் வலியுறுத்தியதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இயக்கத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து நேரடியாக புகார்கள் பெறப்பட்டு, உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஊரகப் பகுதிகளின் மேம்பாட்டில், கிராம நிர்வாக அலுவலர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக ராஜஸ்தான் முதலமைச்சர திரு. பஜன்லால் சர்மா கூறியுள்ளார்.

இன்று ஜெய்ப்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அரசு திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதிலும் இவர்கள் இன்றியமையாத பங்கு வகிப்பதாக குறிப்பிட்டார்.

கிராமம் வளர்ச்சியடைந்தால் மாநிலம் வளர்ச்சியடையும் என்றும் திரு. பஜன்லால் சர்மா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரின் உயர்கல்வித் துறையில் முதலீடு செய்ய முன்வருமாறு கல்வி நிறுவனங்களுக்கு முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா அழைப்பு விடுத்துள்ளார்.

பெங்களூருவைச் சேர்ந்த கல்வித்துறை பிரதிநிதிகள் அடங்கிய குழுவுடன் கலந்துரையாடுகையில் அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

பெரிய கல்வி நிறுவனங்கள், ஜம்மு கஷ்மீரில் தங்களது வளாகங்களை தொடங்கலாம் என்றும் அவர் கூறினார்.

இதற்கு வகை செய்யும் மசோதா, அண்மையில் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்வித்துறையின் வளர்ச்சியில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு. உமர் அப்துல்லா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நியூஸிலாந்து வர்த்தகத்துறை அமைச்சர் திரு. *Todd McClay*-யுடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கபூர்வமாக அமைந்ததாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

ஆக்ராவில் நடைபெற்ற இந்த பேச்சுக்களுக்குப் பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், நாளை கையெழுத்தாகவுள்ளதையும் திரு. பியூஷ் கோயல் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

தில்லி சட்டப்பேரவை கூட்டத்தொடர், நாளை மறுநாள் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி சட்டப்பேரவை வளாகத்திற்கு கடந்த 13ஆம் தேதி வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தில்லி காவல்துறை வெளியிட்டுள்ளது.

>>>>>><<<<<<

இந்தியா - உஸ்பெகிஸ்தான் இடையேயான கூட்டு ராணுவப் பயிற்சி இன்று நிறைவடைந்தது.

உஸ்பெகிஸ்தானின் *Namangan*-ல் நடைபெற்ற இந்த கூட்டுப் பயிற்சியில், சிறப்பாக செயல்பட்டவர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆறு கட்டங்களாக இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை வலுப்படுத்தும் வகையில் இந்த கூட்டு ராணுவப் பயிற்சி நடைபெற்றதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

*ஜம்மு கஷ்மீர், லடாக், ஹிமாச்சலப்பிரதேசம், உத்தரபிரதேசம், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர் மற்றும் தில்லியில் நாளை வரை வெயிலின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம் மற்றும் மேகாலயாவின் ஒரு சில பகுதிகளில் நாளை கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 6 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் வி.ஆர்.துரை - 33 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*சைப்ரஸ் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Dev Ruparelia பட்டம் வென்றார்.*

*19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 21-18, **21-9** என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Jagsher Singh Khangurra**-வை வென்றார்.*

--------------

*ஆசிய படகு சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*தென்கொரியாவின் Chungju-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவுகளில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.*

*>>>>>><<<<<<*

*ஆசிய பீச் விளையாட்டு போட்டிகளின் கபடி பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா, ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் 50-க்கு 27 என்ற புள்ளிக்கணக்கில் பாகிஸ்தானையும், மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் 50-க்கு 31 என்ற புள்ளிக்கணக்கில் பங்களாதேஷையும் வென்றது.*

*>>>>>><<<<<<*

*ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.*

*சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற குஜராத் முதலில் பந்து வீச தீர்மானித்தது.*

*இதனையடுத்து பேட் செய்த சென்னை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 158 ரன் எடுத்தது.*

*159 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த குஜராத் அணி 16 புள்ளி நான்கு ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 162 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*கொல்கத்தா - லக்னோ இடையேயான மற்றொரு போட்டி, இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.*

*லக்னோவில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*வியட்நாமில் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Veer Madam பட்டம் வென்றார்.*

*>>>>>>END<<<<<<*